**<u>JUDICIAL MAGISTRATE COURT NO.II CHENGALPATTU</u>**

**<u>CC No.329/2016</u>**
**<u>DEPOSITION OF WITNESS</u>**
**<u>(Chapter XXIII Code of Criminal Procedure)</u>**
*********

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.II CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 9 |
| Name | : Thiru.Murthy |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.09.2021.

**முதல் விசாரணை -**

நான் 2017 ஆம் வருடம் இறுதியாக சாலவாக்கம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து தற்பொழுது பணி ஓய்வு பெற்று விட்டேன். நான் கடந்த 2014 ஆம் வருடம் மறைமலைநகர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பில் இருந்தபொழுது 18.11.2014 ஆம் ஆண்டு நிலைய பொறுப்பில் இருந்தபொழுது அசா 3 எலிசம்மாள், வயது 32, க| பெ.ஜோசப் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரினைப் பெற்று ம.ம.நகர் காவல் நிலைய குற்ற எண் 794|2014, ச|பி.279, 337, 304(ஏ) இதச வில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். மேற்கண்ட முதல் தகவல் அறிக்கையானது அசாஆ 7 ஆக வழக்கில் குறியீடு செய்யப்படுகின்றது. முதல் தகவல் அறிக்கையை மேல்விசாரணைக்காக வழக்கு கோப்பை ஆய்வாளர் திரு.ராதாகிருஷ்ணன் என்பவரிடம் ஒப்படைத்தேன்.

**குறுக்கு விசாரணை –**

சம்பவம் நடைபெற்ற தேதி 17.11.2014, நேரம் இரவு 08.15 மணி என்று சொன்னால் சரி. புகாரானது ஒருநாள் காலதாமதமாக 18.11.2014 அன்று கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. சம்பவ இடத்தில் அரசு பேருந்து நிலைதடுமாறி எதிரி இயக்கிய தனியார் பேருந்தின் மீது மோதியது என்று கூறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். புகாரும் முதல் தகவல் அறிக்கையும் 24.11.2014 அன்று காலதாமதமாகத்தான் நீதிமன்றததிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரி. புகார் யார் எழுதிக் கொடுத்தது என்று சொன்னால் புகார்தாரருடன் வந்தவர் எழுதிக் கொடுத்தார். புகாரை யார் எழுதிக் கொடுத்தார் என்ற விவரத்தை தெரிந்துகொண்டீர்களா என்றால் இல்லை. புகாரானது வழக்கிற்கு தகுந்தாற்போல்

காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் சம்பந்தப்படாத வாகனத்தின்மீது வழக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. காப்பீடு பெறுவதற்காக பொய்யான புகார் பெறப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

Sd. xxxxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. xxxxxx
Judicial Magistrate No.II
Chengalpattu.